**இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 17 இன் 3.1 ஆம் பந்தியின் (ஆ),(இ),(ஈ) பிரிவுகளின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பான பெறுமானத் தேய்வுக் கொள்கை வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வாகனங்கள் தொடர்பான பெறுமானத் தேய்வுக் கொள்கையும் உள்ளடக்கப்பட்டு கணக்கீட்டுக் குறிப்புக்கள் நாளதுவரையாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பான பெறுமானத் தேய்வுக் கொள்கை வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 28.3(அ) பிரகாரம் ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | கம்பனியால் எதிர்காலத்தில் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கான ஒதுக்கங்களுக்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 4.4 பிரிவின் பிரகாரம் ரூபா 10,000,000 ஆன நிலையான வைப்பு நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டப்பட வேண்டியபோதிலும் , நடைமுறைச் சொத்துக்களில் பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகளின் கீழ் காட்டப்படப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திரத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ரூபா 10,000,000 பெறுமதியான நிலையான வைப்பு நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வுஅவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களுக்கு எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை மற்றும் முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட கணக்காய்வுக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணமாக இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 150,000 என்பது கடந்த வருடங்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் எனவும், 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணங்கள் ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டுதோறும் கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறையல்லாச் சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 5,311,485 பெறுமதியான ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டு முடிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்கள மீள்மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் குறிப்புகளின்படி, ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடங்கப்பட்ட ரூபா 209,000 பெறுமதியான வளிச்சீராக்கி மற்றும் ரூபா 46,410 பெறுமதியான திரைச்சீலைகள் கணக்காய்விற்குச் | இந்த உருப்படிகளின் பெறுமதிகளைக் குறிப்பிடுகின்ற பொருட் பதிவேடு எதிர்காலத்தில் நாளதவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக பொருட் பதிவேட்டில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்ட பொருட் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை. மேலும், பொருட் பதிவேட்டின்படி, ரூபா 1,029,600 ஆன கணனிகள் மற்றும் அச்சியந்திரங்களின் பெறுமதி ரூபா 1,223,800 ஆக ரூபா 194,200 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | தொடர்பான அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| கம்பனியின் வருமானம் | 4,172,827 | 2,207,780 | 1,965,047 | இந்த பகுப்பாய்வு உண்மையான பண பெறுவனவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டள்ள தால், வழங்கப்பட்ட சில விலைப்பட்டியல் மதிப்புகள் மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் பணப் பெறுவனவுகள் பதிவு செய்யப்படவில்லை மற்றும் சரியாக தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வுகள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடத்தின் வருமானம் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க வழிகாட்டிக்கோவை | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) 3.1(i) ஆம் இலக்க வழிகாட்டி | 2022 செப்டம்பர் 08 வரை, நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை அல்லது பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 4.2 ஆம் இலக்க வழிகாட்டி | பொது கம்பனிகளுக்கு உரிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 01/2021 வழிகாட்டிக கோவையின் வழிகாட்டி 4.2 க்குப் பதிலாக, அரச அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பான சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 இன் அடிப்படையில் கணக்காய்வு மற்றும் முகாமைத:துவக் குழுவின் அமைப்பு தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நியமனக் கடிதத்தின்படி, குழு உறுப்பினர்கள், பார்வையாளர்கள் மற்றும் குழுவின் அழைப்பாளர் ஆகியோர் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத:துவக் குழு நியமிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

மீளயாவ்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 771,256 ஆன நட்டம் என்பதுடன் முன்னைய வருடத்தின் நேரொத்த இலாபம் ரூபா 6,715,967 ஆகும். எனவே. நிதி விளைவுகளில் ரூபா 7,487,223 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. செயற்திட்டம் தொடர்பான நேரடிக்கிரயம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 76.73 சதவீதத்தால் குறைவடைந்தாலும், முன்னைய வருடத்தில் ரூபா 13,010,802 ஆன ஈட்டப்பட்ட வருமானம் மீளயாவ்வாண்டில் ரூபா 4,727,468 வரை ரூபா 8,283,334 ஆல் அதாவது 63.66 சதவீதத்தால் குறைவடைந்தமையே இப்பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மை.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 மே 24 ஆம் திகதிய 14/2007 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3(1)(ஆ) பந்தியின் பிரகாரம் நிதியத்தை நிறுவுவதற்கான நடைமுறைகள் வரைவு செய்யப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதியத்தை நிறுவுவதற்கான நடைமுறைகள் வரைவு செய்யப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கார்பன் நிதியம் தனியார் கம்பனி என்ற பெயரில் ரூபா 25 மில்லியன் தொகையொன்று சாதாரண பங்கு மூலதனமாக 2011 திசெம்பர் 31 ஆம் திகதி திறைசேரிச் செயலாளரின் பெயரில் பங்குச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படடிருந்தது.2015 சனவரி 16 ஆம் திகதி, கம்பனியின் பெயர் இலங்கை காலநிலை நிதிய தனியார் கம்பனி என மாற்றப்பட்ட போதிலும், பங்குச் சான்றிதழ் இலங்கை கார்பன் நிதியம் தனியார் கம்பனியின் பெயரிலேயே இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பங்குச் சான்றிதழ் கம்பனியின் பெயரில் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை வங்கிக் கணக்கு தொடர்பாக, 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட ஆனால் மாற்றப்படாத காசோலைகளின் பெறுமதியான ரூபா 362,036 வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் மாற்றப்படாத காசோலைகள் வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |